www.tamilarangam.net

# விழிப்புப்போராட்டம்

*கடந்தமாதம் 25 ஆம் திகதி நடத்தப்பட்ட பண்டாரவளைப் படுகொலையைப் பகிரங்கப்படுத்தவும்

*பண்டாரவளையில் நிராயுதபாணிகளான 30க்குமேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு ஒரு மாதமாகியும் ஆக்கபூர்வமான விசாரணைகள் சிறீலங்கா அரசால் நடத்தப்படாததை உலகின்முன் எடுத்துக்காட்டவும்

*பண்டாரவளைப் படுகொலையைக் கண்டித்ததோடு நின்றுவிடாமல் உலக அரங்கில் அதற்கான விசாரணைகள் நடத்தப்பட்டு நீதி வழுங்கக்கோரியும்

**விழிப்புப்போராட்டம் நடாத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது .**

---

காலம்- 25-11-2000 சனிக்கிழமை மு.ப.11மணி தொடக்கம் பி.ப.1மணிவரை

இடம்- 10 Downing Street
White Hall
London




(தொடரூந்து நிலையத்திலிருந்து பாராளுமன்றம் நோக்கி வெளியேறி வலதுபக்கமாக சந்திவரை நடந்து வலப்பக்கமாக திரும்பி Downing Street ல் சொற்பதூரத்தில்)

காலம்காலமாக தமிழர்கள் சிறைகளிலும் சிறைக்கு வெளியேயும் சிறீலங்கா பேரினவாத அரச நிர்வாகத்தின் பொறுப்பில் உள்ள படையினராலும், அவர்களின் ஆசீர்வாதத்துடன் சிங்களக் குண்டர்களாலும் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர்.

1983ம் ஆண்டு யூலை மாதம் வெலிக்கடைச் சிறையில் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த தமிழர்கள் மீது சிங்கள அரசின் திட்டப்படி இரண்டு கட்டங்களாக சிங்களக் குண்டர்கள் நடத்திய கோர வெறித்தாண்டவத்தினால் 54 தமிழர்கள் வெட்டியும் குத்தியும் கொல்லப்பட்ட மனிதப்பேரவலத்தைத் தொடர்ந்து,

சிறைகளில் தமிழ்க்கைதிகள் கொல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு வருகின்றமையும் நடந்துகொண்டிருக்கின்றது.

அந்தவரிசையில் 25.10.2000 அன்று பண்டாரவளை பிந்துனுவேவாவில் புனர்வாழ்வு முகாம் என்ற பெயரிலான தமிழர் தடுப்புமுகாமில் முப்பதிற்கும்மேற்பட்ட தமிழர்கள் வெட்டியும் குத்தியும் கொத்தியும் கொல்லப்பட்டனர். பலர் படுகாயப்படுத்தப்பட்டனர். சிறீலங்கா இராணுவத்தினரும் காவல்துறையினரும், சிறைஅலுவலர்களும் பார்த்துக்கொண்டிருக்க சிங்களக்குண்டர்கள் படுகொலை நடவடிக்கையை அரங்கேற்றினர். காட்டுமிராண்டித்தனமான இப்படுகொலை நடவடிக்கை குறித்து ஒருமாதமாகியும் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமையைக் கண்டிக்கும் முகமாகவும்

சர்வதேச மனிதஉரிமை அமைப்புகள் இந்நடவடிக்கை குறித்து சிறீலங்காஅரசு மீது கண்டனம் தெரிவிக்குமாறும், நீதிவிசாரணையின்றி தென்பகுதி தடுப்புமுகாம்களிலும் சிறைக்கூடங்களிலும் சிறைவைக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யுமாறு சிறீலங்கா அரசுக்கு அழுத்தம் பிரயோகிக்குமாறும் கோரியும்

பிரித்தானியப் பிரதமரின் அலவலகம் முன்பாக விழிப்புப்போராட்டம் நடாத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது .

மனித உரிமை ஆர்வலர்கள், தமிழுணர்வாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள்.

---

பிரித்தானியாவாழ் ஈழத்தமிழர்கள்

தொடர்புகளுக்கு: 07855 204 438 07884 051 522
07958 940 309 07956 970 392

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்